O.S.4-2018

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.4/2018

வாதி தரப்பு 1வது சாட்சி மணி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மணி | வயது | : | 63/2024 |
| தகப்பனார் பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | பூங்குடி | தொழில் | : | பணி ஓய்வு (மின் வாரியம்) |

நாள்-18.06.2024

வா.சா.1

**<u>1,4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் விசாரணை</u>**

1) 'அ' அட்டவணை சொத்தில் என்ன வருமானம், என்ன சேமிப்பு வருகிறது என்று தாவாவில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரிக்கையில் 1970ல் மூட்டை ரூ.150/- என்றும், 1980-ல் மூட்டை ரூ.250/- என்றும் சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) குறுவையில் 75 மூட்டை நெல் வரும் என்ற விபரத்தை தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரிக்கையில் ஆடு,மாடு வைத்திருந்து, பால் வியாபாரம் செய்தோம் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. அதனால்தான் அது சம்மந்தமாக வழக்குரையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது வழக்கறிஞர் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு மட்டும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம்.

7) தாவா 'அ' அட்டவணை சொத்துக்களில் எனது சகோதர, சகோதரிகளுக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். அவர்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை.

மு.மா.நீ,

8) இந்த வழக்கு தாக்கல் செய்தபோது, எனது சகேதாரிகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு சேர்த்துள்ளேன். பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில்சுட்டி காட்டிய பிறகுதான் சகோதரிகளை வழக்கில் சேர்த்தேன் என்றால் ஆமாம்.

9) நான் எனது வழக்குரையில், எனது சகோதரிகளுக்கு திருமண செலவுகளை செய்து கொடுத்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதை எனது அப்பா செய்தார்.

10) எனது வழக்குரையில் எனது சகோதரிகள் பாகம் எதுவும் கோரவில்லை என்று சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

11) எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், நான் தாக்கல் செய்த வழக்குரையிலும் சில பூர்வீக சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்புதான் வழக்குரையில் சேர்த்தேன் என்றால் ஆமாம்.

12) 'அ' அட்டவணை சொத்தில் புல எண்.26/9ல் உள்ள வீடு 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவர் வீடு கட்ட ஆரம்பித்தவுடன்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

13) நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து இரண்டு மாதங்கள் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல்செய்தேன் என்றால் உயர்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று பின்புதான் இந்த வழக்கை தாக்கல் செய்ய முடிந்தது. மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். உயர் நீதிமன்ற உத்தரவின் நகலையும் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு கோப்பில் உள்ளது. அதை குறியீடு செய்யவில்லை.

14) நான் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்ய சொத்துக்களை அடைந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவருக்கும் மட்டும் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல. அவர் குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் அவருக்கு அறிவிப்பு கொடுத்தேன். அவ்வாறு சட்ட அறிவிப்பில் கர்த்தா என்பதால் தங்களுக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

15) எனது தகப்பனார் 2007ம் வருடம் இறந்துவிட்டார்.

16) 2017ல் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம்.

17) 1972ம் வருடம் 1ம் பிரதிவாதிக்கு திருமணமானது என்றால் ஆமாம். திருமணமான ஒரு வருடத்திலேயே கே.ராயவரம் குடும்பத்துடன் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் என்றால் இல்லை. குடும்பத்துடன்தான் இருந்தார்.

18) 1ம் பிரதிவாதி திருமணமான ஒரு வருடத்திலேயே அவரது மனைவியுடன் தனிக்குடித்தனம் போய்விட்டார் என்றால் சரியல்ல. தனியாக வசித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு அவர் தனியாக போய் தனியாக வருமானம் ஈட்டினார் என்றால் சரியல்ல.

19) 1ம் பிரதிவாதி பொதுக்குடும்ப கர்த்தாவாக இல்லை என்றாலும், எனது தகப்பனார் இறந்த பின்பு பழனியப்பன் தான் கர்த்தாவாக இருந்தார் என்றால் சரியல்ல.

20) 1ம் பிரதிவாதியின் சுயசம்பாத்ய சொத்துக்களை அடைய வேண்டிதான், 1ம் பிரதிவாதி குடும்ப கர்த்தாவாக இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.